# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure) .....

IN THE COURT OF IV ADDITIONAL SESSIONS JUDGE

S.C. No. 23/2022

Prosecution witness :PW-4 /LW-2

| | | | |
|---|---|---|---|
| Name | : Mr. Kumar | Caste | : Not willing |
| Father's Name | : Mr. Subramani | Calling | : Auto Driver |
| Village | : Old Washermenpet | Religion | : Not willing |
| Taluk | : Chennai | Age | : 35 |

(Accused No.1 was present today. A2 was called absent. A petition u/s.317 Cr.P.C filed for A2 and the same was allowed. Witness examined in the presence of A1 and the counsel for the defence. )

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of January 2024.

**முதல் விசாரணை:–**

நான் எண்.6 எ, போஜராஜ நகர் மெயின் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை –21 என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். நான் கொருக்குப்பேட்டை கண்ணன் தெருவில் உள்ள ஆட்டோ ஸ்டான்டில் ஆட்டோ ஓட்டி வருகிறேன். எனக்கு சாட்சிகள் சிவராஜ், கார்த்திக், ஆறுமுகம், ராஜேஷ் ஆகியோரை தெரியாது. எனக்கு ஆஜர்

எதிரி ஜெயசிங்கையும், ஆஜரில் இல்லாத மதன் என்பவரையும் தெரியாது. எனக்கு இந்த வழக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது. இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக என்னை போலீஸார் விசாரிக்கவில்லை.

**(சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரப்பட்டு, அது பரிசீலனைக்கு பின்னர் நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.)**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக வண்ணாரப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும், அப்போது சாட்சி சிவராஜை எனக்கு தெரியும் என்றும், கடந்த 14.06.2019 அன்று காலை 11.30 மணியளவில் நான் எம்.சி.ரோடு, சிமெண்டரி ரோடு சந்திப்பில் சவாரிக்காக நின்றிருந்த போது, எங்கள் பகுதியை சேர்ந்த சிவராஜ் வந்தார் என்றும், அப்போது அங்கு வந்த 2 நபர்கள் சிவராஜை வழிமறித்து, ஓத்தா நீ அப்புறம் போய் ஜூஸ் குடி, எங்களுக்கு தண்ணீ

அடிக்க பணத்தை கொடுடா என்று கேட்டார்கள் என்றும், அதற்கு சிவராஜ் மறுக்கவே, மேற்படி 2 நபர்களும் சிவராஜை பார்த்து, ஓத்தா தேவிடியா பையா நான் யார் தெரியுமா வண்ணாரப்பேட்டை ரவுடி ஜான்ஜெய்சிங் என்று கூறியதோடு, அவருடன் வந்த மற்றொருவரை காட்டி இவன் வீரக்குட்டி தெரு மதன் என்றும், எங்கள் பெயரை கேட்டால் வண்ணாரப்பேட்டை, தண்டையார்ப்பேட்டை ஏரியாவே அலறும் என்றும் கூறி, இருவரும் சிவராஜை கைகளால் மாறி மாறி அடித்தார்கள் என்றும், சிவராஜ் சத்தம் போட்டதும், ஜான்ஜெயசிங் அவரது இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து சத்தமா போடுற இத்தோடு செத்து தொலைடா என்று சிவராஜ் கழுத்தை நோக்கி ஓங்கி வெட்டினார் என்றும், சிவராஜ் சற்று விலகியதால் அந்த வெட்டு அவர் மீது படாமல் உயிர் பிழைத்தார் என்றும், சிவராஜ் உயிருக்கு பயந்து காப்பாற்றுங்கள் என்று சத்தம் போட்டதும், அக்கம் பக்கத்தில் நின்ற பொது மக்களும், ஆட்டோ ஓட்டுனர்களும் சிவராஜை காப்பாற்ற ஓடி வந்ததை பார்த்து மேற்படி எதிரிகள் இருவரும் அருகில் இருந்த ஜூஸ் கடையிலிருந்து கண்ணாடி டம்ளர் மற்றும் ஜக்கையும் சிவராஜ் மீதும், ரோட்டிலும் சரமாரியாக வீசி

அடித்தார்கள் என்றும், அவை சாலையில் விழுந்து உடைந்து சிதறின என்றும், இதனால் பொது மக்கள் உயிருக்கு பயந்து எல்லா பக்கமும் சிதறி ஓடினார்கள் என்றும், கடைக்காரர்களும் பயந்து அவர்களது கடைகளை முடிவிட்டார்கள் என்றும், வாகன ஓட்டிகள் அவர்களது வாகனங்களை ஆங்காங்கே நிறுத்தி விட்டார்கள் என்றும், அதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது என்றும், அப்போது ஜான்ஜெயசிங் கையில் வைத்திருந்த கத்தியை காட்டி, தங்களை பிடிக்க வந்தால் கத்தியால் வெட்டி கொலை செய்து விடுவோம் என்று சிவராஜையும், பொது மக்களையும் பார்த்து மிரட்டிவிட்டு அங்கிருந்து ஓடி விட்டார்கள் என்றும் கூறியிருக்கிறேன் என்று சொல்வது சரியல்ல. நான் இந்த சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி என்றும், நேரில் பார்த்ததாக மேற்கண்டவாறு ஆய்வாளர் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொல்வது சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

தனக்கு குறுக்கு விசாரணை இல்லை என்று எதிரிகள்

தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரால் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டு அது பதிவு செய்யப்பட்டது.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

J CHANDRAN

Digitally signed by J CHANDRAN
Date: 2024.01.09 18:00:07 +0530

Dt. 09.01.2024

IV Addl. Sessions Judge